

புதிதாக உருவாகும் பூங்காவின் மாதிரி தோற்றத்தை படத்தில் காணலாம்.

ஷெனாய்நகர்

# திரு.வி.க. பூங்கா பிரமாண்டமாக புதுப்பிக்கப்படுகிறது

## மெட்ரோ ரெயில் நிர்வாகம் ஏற்பாடு

சென்னை, செப். 21-

ஷெனாய் நகர் மெட்ரோ ரெயில் நிலையம், திரு.வி.க. நகர் பூங்கா அருகே, பூமிக்கு அடியில் அமைக்கப்பட்டுள்ளது.

**உருமாறிய பூங்கா**

இங்கு மெட்ரோ ரெயில் நிலையம் அமைக்கும் பணி 8 வருடங்களுக்கு முன்பு தொடங்கியது. இதனால் திரு.வி.க. நகர் பூங்கா உருமாறியது. பொதுமக்கள் பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டது.

தற்போது ஷெனாய்நகர் மெட்ரோ ரெயில் நிலையம் விரிவாக்கம் செய்யப்படுகிறது. இதற்கான பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

**வணிக வளாகம்**

ஷெனாய் நகர் ரெயில் நிலையத்தில் நவீன வசதிகளுடன் கூடிய வணிக வளாகம் 2 அடுக்கு கொண்ட கட்டிடமாக பூமிக்கு அடியில் உருவாகிறது. இது ரூ.175 கோடி செலவில் அமைக்கப்படுகிறது.

திரு.வி.க. நகர் பூங்காவுக்கு கீழே இந்த வளாகம் 4 லட்சம் சதுர அடி பரப்பளவில் உருவாகிறது. முதல் தளத்தில் கார்கள், வாகனங்களை நிறுத்த வசதி செய்யப்படுகிறது. இதில் 416 கார்களையும், 856 இரு சக்கர வாகனங்களையும் நிறுத்தலாம். அடுத்த தளத்தில் அனைத்து பொருட்களையும் விற்பனை செய்யும் வணிக வளாகம் அமைக்கப்படுகிறது.

**மீண்டும் உயிர்பெறுகிறது**

இதைதொடர்ந்து மெட்ரோ நிர்வாகம் சார்பில் ஷெனாய்நகர் திரு.வி.க. நகர் பூங்கா புதுப்பிக்கப்படுகிறது. இந்த பூங்கா பிரமாண்டமாக உருவாகிறது.

பல்வேறு பொழுது போக்கு அம்சங்களுடன் இது உருவாக்கப்படுகிறது. எழில்மிகு நீரூற்றும் அமைக்கப்படுகிறது. கூழாங் கற்களிலான நடைபாதை, குழந்தைகள் விளையாடுவதற்குரிய வசதிகள், டென்னிஸ் கிரவுண்ட், நடைபயிற்சி பாதை ஆகியவை இந்த பூங்காவில் அமைக்கப்படுகின்றன.

இவை தவிர நிழல் தரும் மரங்கள், மலர் செடிகள் வைக்கப்படுகின்றன. பொது மக்கள் அமர்ந்து ஓய்வு எடுக்கவும், இயற்கை எழிலை ரசிக்கவும் இருக்கைகள் அமைக்கப்படுகின்றன.

**திறந்த வெளி தியேட்டர்**

பொழுது போக்கு அம்சங்களும் இந்த பூங்காவில் இடம் பெறுகின்றன. திறந்த வெளி தியேட்டர் அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த பூங்கா புதுவடிவம் பெற்றால் ஷெனாய்நகர் பகுதி மக்களுக்கு சிறந்த பொழுது போக்கு பூங்காவாகவும், குழந்தைகள் மகிழ்வுடன் விளையாடும் இடமாகவும் இருக்கும்.